**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**OS.No.124/2014**

**வழக்கு சாட்சி PW.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **முத்துச்சாமி** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : மாரியப்பன் | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : செம்பரான்குளம் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 56/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 21.07.2026 |

**(இடைக்கால மனு எண். IA 02/2026 அனுமதிக்கப்பட்டு சாட்சி மாரிமுத்து மகன் முத்துச்சாமி என்பவருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு நீதிமன்றத்தில் தோன்றிய சாட்சி முத்துச்சாமி அவரது தந்தை பெயர் மாரியப்பன் என்று தெரிவித்தார் , அழைப்பாணை அனுப்பக்கோரி மனு தாக்கல் செய்த மனுதாரரின் வழக்கறிஞர் ஆஜர் சாட்சி முத்துச்சாமி தான் அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள நபர் என்றும், தந்தை பெயரில் எழுத்துப்பிழை ஏற்பட்டுவிட்டது என்றும் தெரிவித்து குறிப்பாணை தாக்கல் செய்தார்)**

**முதல் விசாரணை :**

நான் செம்பரான்குளத்தில் வசித்து காட்டுவேலை செய்து வருகிறேன். வழக்கு தாக்கல் செய்துள்ள அமிதவானனின் தோட்டம் செம்பரான்குளத்தில் உள்ள எனது தோட்டத்திற்கு கீழ் உள்ளது. வாதி அமிதன் அனுபவித்து வரும் தோட்டத்தின் விஸ்திரணம் தோராயமாக 20–25 ஏக்கர் இருக்கும். எனது அப்பா காலத்தில் இருந்து அமிதவானன் அவரது தோட்டத்தை

அனுபவம் செய்து வருகிறார் . இந்த வழக்கின் எதிர்தரப்பினராக உள்ள எபினேசர் மகன் ஜெயக்குமாரை நான் பார்த்துள்ளேனா என்றால் நான் பார்த்ததில்லை . எபினேசர் மகன் ஜெயக்குமார் என்ற பெயர் கொண்ட நபர் யாரும் வாதி அமிதன் தோட்டத்திற்கு வந்ததை நான் பார்த்துள்ளேனா என்றால் நான் பார்த்ததில்லை . எனது ஆதார் அடையாள அட்டையின் நகல் **வா.சா.ஆ.19.** ஆகும்.

**( 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வழக்கறிஞர் யாரும் முன்னிலையாகாத காரணத்தால் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது)**

**( 3 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் செல்வி .சுவேதா என்பவர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.21 17:28:01 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I,**

**கொடைக்கானல்.**

**OS.No.124/2014**

**வழக்கு சாட்சி PW. 4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **தனராஜ்** | தொழில் | : கூலி |
| தகப்பனார் பெயர் | : ஆறுமுகம் | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : செம்பரான்குளம் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 70/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 21.07.2026 |

**<u>முதல் விசாரணை</u>**

செம்பரான்குளம், கதவு எண் .2/246 ல் நான் 1986 ல் இருந்து குடியிருந்து வருகிறேன் . வாதி அமிதவானனின் கணக்குபிள்ளையாக நான் 10 வருடங்கள் வேலை செய்துள்ளேன். அவர் காபி, வாழை, எழும்பிச்சை, அவகோடா ஆகியவற்றை சுமார் 30 வருடங்களாக என் தோட்டத்திற்கு கிழக்கே உள்ள அவரது தோட்டத்தில் பயிர் செய்து வருகிறார் . எனது தோட்டமானது செம்பரான்குளத்தில் வெண்குளம் என்ற பகுதியில் உள்ளது . எனது தோட்டம் அமைந்துள்ள இடம் வடகவுஞ்சி கிராம எல்லைக்குள் அடங்கும் . இந்த வழக்கின் பிரதவாதியான எபினேசர் மகன் ஜெயக்குமார் என்பவரை நான் பார்த்துள்ளேனா என்றால் நான் பார்த்ததில்லை. எபினேசர் மகன் ஜெயக்குமார் என்பவர் வாதி அமிதன் தோட்டத்திற்கு வந்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

( 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வழக்கறிஞர் யாரும் முன்னிலையாகாத காரணத்தால் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது)

( 3 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் செல்வி .சுவேதா என்பவர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.21 17:28:07 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.

# வாக்குமூலம்

## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.

## OS.No.124/2014

## வழக்கு சாட்சி PW.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **செல்வம்** | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : பாண்டியன் | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : செம்பரான்குளம் | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 60/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 21.07.2026 |

<u>முதல் விசாரணை</u>

நான் செம்பரான்குளத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். எனது அடையாள அட்டையை காட்டும் பொருட்டு எனது ஆதார் அடையாள நகலை தாக்கல் செய்கிறேன் . அந்த ஆவணம் **வா.சா.ஆ.20** ஆகும். இந்த வழக்கின் வாதியான அமிதன் என்கின்ற அமிதவானனை எனக்குத் தெரியும் . அமிதவானன் விவசாயம் செய்து வருகிறார். அவரது தோட்டத்தில் வாழை, அவகோடா, காபி, எழும்பிச்சை ஆகியவற்றை பயிர் செய்து வருகிறார் . வாதி அமிதவானன் மற்றும் அவரது குடும்பத்தார் சுமார் 60 வருடங்களாக செம்பரான்குளத்தில் அவரது தோட்டத்தில் பயிர் செய்து வருகிறார்கள் . செம்பரான்குளம் வடகவுஞ்சி கிராம எல்லைக்குள் அடங்கும் . எனது தோட்டத்திற்கு பக்கம் தான் அமிதனின் தோட்டம் உள்ளது . அமிதனின் தோட்டம் சுமார் 20–25 ஏக்கர் நிலப்பரப்பு நிலமாகும். அமிதனின் தோட்டத்தை சொந்தம் கொண்டாடி எபினேசர் மகன் ஜெயக்குமார் என்பவர் அமிதனின் தோட்டத்திற்கு வந்து நான்

பார்த்துள்ளேனா என்றால் அவ்வாறு நான் யாரையும் பார்த்ததில்லை.

**( 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வழக்கறிஞர் யாரும் முன்னிலையாகாத காரணத்தால் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது)**

**( 3 ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் செல்வி .சுவேதா என்பவர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது )**

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.07.21 17:28:15 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.